## தி.மு.க. தீர்மானக்குழு சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

### கவிஞர் தமிழ்தாசன் தலைமையில் அக்ரி கணேசன் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம்!



சென்னை, ஜூன் 2-

கழகத் தீர்மானக்குழு நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் நேற்று, 31.05.2026 -ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணி அளவில் அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் கூட்ட அரங்கில், தீர்மானக்குழுத் தலைவர் கவிஞர் தமிழ்தாசன் தலைமையில் தீர்மானக்குழு செயலாளர் அக்ரி கே.பி.டி.கணேசன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தீர்மானக்குழு துணைத் தலைவர் டாக்டர் மாசிலாமணி, தீர்மானக்குழு இணைச் செயலாளர் பா.சத்திய மூர்த்தி, தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, தீர்மானக் குழு உறுப்பினர்கள் க. வேங்கடபதி, ச.தங்கவேலு, ஆர்.சேதுநாதன், செஞ்சி சிவா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் கீக்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

**தமிழக வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி**

2026 ஆம் ஆண்டு நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு. கழகம் வைத்த வேண்டுகோளுக்கு இணங்க, கழகத்தின் மீதும், தலைவர் தளபதி அவர்கள் மீதும் நம்பிக்கை வைத்து, கழகத் தலைவர் தளபதி மற்றும் தி.மு.க. தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக்கூட்டணிக்கு, வாக்களித்த தமிழக மக்கள் ஒரு கோடியே 54 இலட்சத்து 82 ஆயிரத்து 782 வாக்காளர்களுக்கு இந்தத் தீர்மானக் குழுவானது தனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

**கழகத் தலைவர் தளபதியார்க்கு நன்றி**

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026 இல் தந்தை பெரியார் அவர்களின் சமூக நீதி சார்ந்த இலட்சியக் கோட்பாடு உறுதியோடும்; பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழியில் நின்றும் ; தமிழ்நாட்டில் மத சார்பற்றக் கொள்கைக் கூட்டணியை உருவாக்கி; அதன் மூலம் தேர்தல் களத்தில் பரப்புரை உறுதியோடு நம்மையெல்லாம் நெறிப்படுத்தி வழி நடத்தியவராய்; ஓய்வு இல்லாமல் உழைத்து 73 சட்டமன்றத் தொகுதிகளில் நமது கழகக்கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெறக் காரணமாகப் பெரிதும் விளங்கியவ ராய்த் திகழ்ந்த நம் கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு, இந்தக் கூட்டம் தனது மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது .

**சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருக்கு வாழ்த்துகள்**

தமிழ்நாடு முழுவதும் சட்டமன்றத் தேர்தலில் ஈடுபட்டுக் கழகக் கூட்டணி வெற்றி பெற, வாக்காளர்கள் மத்தியில் கடுமையான முறையில் பரப்புரை செய்து வந்தவரும்; இரண்டாவது முறையாகச் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் நின்று வெற்றி பெற்று எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்றுச் சட்டமன்றப் பணிக் கடமை ஆற்றி வருபவருமான கழக இளைஞரணிச் செயலாளர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இக் கூட்டம் நன்றி மிகுந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது .

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் சிறப்பாகக் கொண்டாடுதல்**

பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பிறகு, பாலைவனத்திலும், சோலைவனத்திலும் பயணம் செய்து கழகத்தை வழி நடத்தியவரும்; இந்திய ஜனநாயகப் போரில் அரசியல் அரணாக நின்றவரும்; இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு ஊனம் ஏதும் ஏற்படாமல் பாதுகாவலராக இருந்தவரும்; மதசார்பற்ற இந்தியாவைக் காப்பதில் தலையாயத் தளகர்த்தராக முன்நின்றவரும்; தமிழ், தமிழினம், தமிழ்நாடு என்பதில் தன்னை ஒப்படைத்துக் கொண்டவரும்; தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் கொள்கைகளை ஆட்சியிலும், கட்சியிலும் நடைமுறைப்படுத்திச் சமூக நீதியை மக்கள் பெறுவதற்குக் களங்கண்ட வரும்; பல்வேறு சோதனைகளைத் தாண்டித் திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் பேரியக்கத்தைத் தலைமை தாங்கி நடத்திய வருமான முத்தமிழ் அறிஞர்கலைஞர் அவர்களின் பிறந்தநாள். வரும் ஜூன்3; அந்நாளில் ஆங்காங்குக் கழக அமைப்புகள் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்வதில் பங்கேற்று மக்களுக்குப் பயன்படும் வகையில், சிறப்பாகக் கொண்டாடிட இத் தீர்மானக் குழு தீர்மானிக்கிறது .

**தலைவர் எடுக்கும் முயற்சிகளுக்குத் துணை நிற்போம்**

நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில் கழகம் வெற்றி வாய்ப்பை இழந்த

காரணத்தைக் கண்டறிய; இரத்தமும், சதையும், நாடி நரம்பும், எலும்புமாக இருந்து வரும் கழக உடன்பிறப்புகள், பொறுப்பிலுள்ள நிருவாகிகள் மற்றும் பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரின் கருத்துக்களைக் கேட்டறிய இணையதளம் ஒன்றைத் துவக்கியதோடு; அந்தந்தப் பகுதி, தொகுதிகளில் சென்று தலைமையால் நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழு நேரடியாக அனைவரையும் சந்தித்துக் கருத்துகளைக் கேட்டறிந்து தலைமைக்கு அறிக்கைகள் தரவும்; பெற்ற அறிக்கைகள் மீது கழகத்தைச் செம்மைப்படுத்தி மறுசீரமைப்பு செய்வதற்குக் கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் எடுத்துக் கொள்ளப்படவுள்ள கழகப் புத்தாக்க எவ்வகை முயற்சிகளுக்கு, என்றென்றும் இத் தலைமைத் தீர்மானக் குழு துணை நிற்கும் என்று உறுதி அளிக்கிறது.

**துரோகம் செய்த காங்கிரஸ் கட்சிக்குக் கண்டனம்**

தமிழகத்தில் கழகக் கூட்டணியில் பங்கேற்று இருந்த காங்கிரஸ் கட்சி, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெருமளவுக்கு அவ்வப்போது பெற்று வந்ததோடு, கழகத்தின் ஆதரவோடு ஒன்றியத்தில் ஆட்சி அமைந்த போதும், தேசிய அளவில் இந்திய மக்களுக்காக எடுக்கும் எவ்விதமான முடிவிலும் கழகத்தின் பங்களிப்புத் துணை என்பது, வலிமை வாய்ந்ததாக அமைந்து இருந்தது. கழகம் இந்தியா கூட்டணியில் அங்கம் பெற்றிருந்த முறையிலும் காங்கிரஸ் கட்சிக்குத் தனக்கென சுயமரியாதைச் செல்வாக்கு பெற்றிருந்தது. தேர்தலுக்கு முன்பு கூட ஒரு மாநிலங்கள் உறுப்பினர் இடத்தையும் திமுகவிடமிருந்து பெற்றது . கழகச் செயல்வீரர்கள் உழைப்பினால் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் ஐந்து உறுப்பினர்களையும் காங்கிரஸ் பெற்றது. தேர்தல் முடிந்து நன்றி கூட திமு.க. தலைமைக்குச் சொல்ல முன்வராத காங்கிரஸ், பதவிப் பித்து பிடித்தலைந்து ஓடோடிச் சென்று, கொல்லைப் புறத்தில் புதிய கூட்டணி அரசாங்கத்தில் ஒட்டிக்கொண்ட அக்கட்சியின் அநாகரிக செயலானது; அரசியல் வரலாற்றில் சிறிதும் நன்றியில்லாமல் துரோகம் இழைத்ததாகும். பதவிக்காக முதுகில் குத்தி, புருடஸ் வரலாறு படைத்த கயமைத்தனக் காங்கிரஸ் கட்சிக்கு இந்தக் தீர்மானக் குழுக் கூட்டம் தனது வன்மையான கண்டனத்தைப் பதிவு செய்கிறது.

**சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கத் தவறியுள்ள மோசடி ஆட்சிக்குக் கண்டனம்**

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக அரசுக்கு எதிராகப் பல்வேறு வகையில் கோயபல்ஸ் பிரச்சாரம் செய்தும்; பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்தும்; பட்டி, தொட்டிகள் எங்கும் பண மூட்டைகளை இறக்கி விட்டும் ; சிறுவர்கள் மட்டுமின்றி இளைஞர்கள், பெண்கள் போன்ற வாக்காளர்களைச் சமூக வலைதளங்கள், தொழில் நுட்ப தளங்கள் என மூளைச் சலவைப் பரப்புரை செய்தும் வந்த தற்குறிகளால் தமிழகக் கோட்டையைப் பிடித்தார்கள். அறநெறி அரசியல் தவறிக் குதிரைப் பேர அரசியல் நடத்திய தன் மூலம் சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் முயற்சி நடைபெற்றது . ஆட்சிக்கு வந்து 20 நாள்கள் கூட ஆகவில்லை என்ற போதும்; இந்த ஆளவந்தார்கள் ஆட்சியில் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகச் சிறுமிகள், மாணவிகள் குடும்பப் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள், ரவுடிகள் நடத்தும் 60க்கும் மேற்பட்ட படுகொலைகள், கொள்ளை, வழிப்பறி, திருட்டு, கஞ்சா பிரவுன் சுகர் போன்ற போதைப்பொருள் விற்பனைகள் எனச் சமூகச் சீர்கேட்டு அவலங்கள் எங்கும் தொடர்கின்றன. அரசியல் மோசடித் தனம் செய்து தமிழகத்தில் அரியணை எறிய இவர்கள் ஆட்சியில் ஏற்பட்டுள்ள சட்டம் ஒழுங்குச் சீர்கேடுகள், சட்டமன்ற அவை தலைவர், முதலமைச்சர், அமைச்சர்கள் பதவியேற்பு நிகழ்ச்சிகளில் தமிழர்உரிமை மறுக்கப்பட்டு, “தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல்” மூன்றாம் இடத்தில் தள்ளப்பட்டது; அரசுக்கு ஆலோசனை சொல்ல சோதிடர் ஒருவரை நியமித்தது; கர்நாடக அரசு மேகதாது அணைகட்டும்முயற்சியைக் கண்டிக்கத் துணிச்சல்லாதது ; தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய நிதி ஆதாரங்களைப் பிரதமர்

மோடியிடத்தில் கேட்டுப் பெறத் தெம்பு இல்லாதது; “நீட்” தேர்வு விலக்குப் பற்றிக் குரல் கொடுக்காதது ; அரசு நிர்வாகம் பற்றி இதுவரை செய்தியாளர்களைச் சந்திக்காதது; வெற்று விளம்பரங்கள் செய்து வருவது என இப்படியான ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டு, நிர்வாக எந்திரம் இயங்காத இந்த ஆட்சியின் மெத்தனப் போக்கிற்குக் கழகத் தீர்மானக் குழு தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்கிறது.

**இரங்கல் தீர்மானம்**

கீரை எம் .எஸ். விஸ்வநா தன், (தீர்மானக் குழுச் செயலாளர்,) அறந்தாங்கி மிசா சி.இராமநாதன், (தீர்மானக் குழு உறுப்பினர்) பி.ஆர்.சரவணன் (தீர்மானக் குழு உறுப்பினர்) ஆகியோர் மறைவிற்கு தீர்மானக் குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்த வேண்டுகிறேன்.

இவ்வாறு தீமானங்கள் நிறைவேற்றப்பட்டன.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தி.மு.க. அலுவலகமான கலைஞர் மாளிகையில் நடைபெற்றது. சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஒன்றிய பகுதி மற்றும் வார்டு செயலாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழாவை

# சேலம் மத்திய மாவட்டம் முழுவதும் நல உதவிகள் வழங்கி சிறப்பாகக் கொண்டாடுவோம்!

### மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம்!

சேலம், ஜூன் 2-

முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பிறந்த நாளை சேலம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று மத்திய மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தின் தீர்மானம் வருமாறு:-

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மாவட்ட தி.மு.க. அலுவலகமான கலைஞர் மாளிகையில் நடைபெற்றது. சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஒன்றிய பகுதி மற்றும் வார்டு செயலாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பிறந்த நாளான ஜூன் மூன்றாம் தேதி சேலம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் ஒவ்வொரு பகுதிகளிலும் ஒவ்வொருவர் இல்லங்களிலும், ஒவ்வொரு பாகங்களிலும் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதோடு அந்தந்த பகுதியில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும் என்றும் இளைஞர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளையும் நடத்திட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டன.

கூட்டத்தில் மத்திய மாவட்டப் பொருளாளர் கார்த்திகேயன் தலைமை செயற்குழு உறுப்பினர் ராஜேந்திரன் சேலம் மாநகர செயலாளர் ரகுபதி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## த.வெ.க.வின் ரீல்ஸ் ஆட்சியில்

# பேருந்துகள் இல்லாமல் இரவு முழுவதும் காத்திருந்த பயணிகள் போராட்டம்!

### மதுரையில் பரபரப்பு!



மதுரை, ஜூன்.1-

மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் பேருந்துகள் இல்லாததால் இரவு முழுவதும் காத்திருந்த பயணிகள் அதிகாலையில் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

மதுரை மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் இருந்து சென்னை, திருச்சி, தஞ்சாவூர், பெரம்பலூர், அரியலூர், ஒசூர் உள்ளிட்ட வட மாவட்டங்களுக்கும், தூத்துக்குடி, கன்னியாகுமரி, நெல்லை உள்ளிட்ட தென் மாவட்டங்களுக்கும், பெங்களூரு, கோழிக்கோடு உள்ளிட்ட பக்கத்து மாநில நகரங்களுக்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் தினமும் 2 ஆயிரம் பேருந்துகள் வரை இயக்கப்படுகின்றன.

இந்த பேருந்து நிலையத்தில் 8 நடைமேடைகள் உள்ளன. இரவு 7 மணி தொடங்கி அதிகாலை வரை சென்னை உள்ளிட்ட வெளியூர் பேருந்துகள் இயக்கும் இடங்களில் பேருந்துகள் நின்று கொண்டிருக்கும். பயணிகள் எண்ணிக்கையும் அதிகளவில் இருக்கும். பண்டிகை நாட்கள் மற்றும் சிறப்பு தினங்களின் போது சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும். வெளியூர்களிலிருந்து மதுரை வழியாக இயக்கப்படும் பேருந்துகளும் மாட்டுத்தாவணி வந்து பயணிகளை ஏற்றிச் செல்வது வழக்கம்.

இந்நிலையில் நேற்று சென்னை, திருச்சி, பெரம்பலூர், தஞ்சாவூர் உள்ளிட்ட வட மாவட்டங்களுக்கு செல்வதற்காக குடும்பத்துடன் வந்தவர்கள் பேருந்துகள் இல்லாமல் காத்திருந்தனர். இரவு 9 மணியளவில் பேருந்து நிலையத்துக்கு வந்தவர்களுக்கு இன்று அதிகாலை வரை பேருந்துகள் கிடைக்கவில்லை. வெளியூர்களில் இருந்து வரும் பேருந்துகளும் வரவில்லை. வந்த ஒரு சில பேருந்துகளிலும் இருக்கைகள் காலியாக இல்லை.

பேருந்து நிலையத்தில் இரவு முழுவதும் காத்திருந்து பேருந்துகள் கிடைக்காத ஆத்திரத்தில் பயணிகள் திடீரென பேருந்து நிலையத்துக்கு வெளியே வந்து மேலூர் பிரதான சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதையடுத்து அங்கு வந்த போலீஸாரும், போக்குவரத்து துறை அதிகாரிகளும் பேச்சுவார்த்தை நடத்தி மாற்று பேருந்து ஏற்பாடுகள் செய்வது தருவதாக உறுதியளித்தனர். இதையேற்று பயணிகள் சாலை மறியலை கைவிட்டனர். பின்னர் மாற்று பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டு பயணிகள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதுகுறித்து பயணிகள் கூறுகையில், மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்துக்கு எப்போது வந்தாலும் பேருந்து கிடைக்கும். பண்டிகை நாட்களில், சிறப்பு தினங்களில் பயணிகள் கூட்டம் அதிகமாக இருக்கும் போது சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும். குறிப்பாக நகரப் பேருந்துகள் தொலைதூர பேருந்துகளாக இயக்கப்பட்டு கூட்ட நெரிசல் சமாளிக்கப்படும்.

மாட்டுத்தாவணியிலிருந்து இயக்கப்பட்ட பேருந்துகளை வைகாசி விசாகத்துக்காக திருச்செந்தூர், பழநி உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பியுள்ளனர். இதனால் ஏற்படும் பேருந்துகள் பற்றாக்குறையை சமாளிக்க கூடுதல் பேருந்துகள் இயக்க அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. முன்னேற்பாடுகள் செய்யாமல் பேருந்துகளை வைகாசி விசாகத்துக்காக அதிகாரிகள் திருப்பி விட்டதால் பயணிகள் பாதிக்கப்பட்டனர் என்றனர்.



கழக மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் சுபேர்கான் சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளர் சேவா ரத்னா எஸ். நஜிம் மற்றும் எம்.நிலோபர் நிஷா முஹம்மத் மன்சூர் ஆகியோரின் சென்னை – நெற்குன்றத்தில் நடைபெற்ற புதிய இல்ல திறப்பு விழாவில் கலந்து கொண்டார். இதில் கழக நிர்வாகிகள் மற்றும் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை

திருவாரூர், ஜூன் 2-

திருவாரூர் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் இன்று (02.06.2026) நடைபெற இருப்பதையொட்டி மாவட்ட கழக செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம். எல்.ஏ., அறிக்கை வெளியிட்டுள்ளார்.



இதுகுறித்து அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இன்று (02.06.2026 செவ்வாய்க்கிழமை) காலை 10.00 அளவில் திருவாரூர் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம், மாவட்ட அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையில், திருவாரூர், ஹோட்டல் காசீஸ் இன் குறிஞ்சி ஹாலில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் மாவட்டக் கழக நிர்வாகிகள் , ஒன்றிய, நகர,பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் மாவட்டப் பிரதிநிதிகள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன், கூட்டத் தில் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்து கலந்தாலோசிக்கப்படவுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட கழக செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம். எல்.ஏ., தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.